சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

செயல்முறை ஆணை எண் 21949 /டி3/2020, நாள் 7.07.2021

14 JUL 2021

பொருள்: நிர்வாகம் - தொழில்நுட்பக் கல்வித் துறை – அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி – (லேட்) திரு.பெ.அருணாசலம், பணிமனை போதகரின் வாரிசுதாரர்(மகன்) திரு.அ.பிரகாஷ்ராஜ், என்பவருக்கு தூத்துக்குடி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (3ப) எண். 6 உயர்கல்வி (சி2) துறை, நாள் 23.2.2021

----------

பார்வையில் காணும் அரசாணையில், தூத்துக்குடி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.அ.பிரகாஷ்ராஜ், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை

ஒம்/- க.லட்சுமி பிரியா
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திரு.அ.பிரகாஷ்ராஜ்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
தூத்துக்குடி (முதல்வர் வழியாக)

நகல் :

1. முதல்வர்,
   அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
   தூத்துக்குடி
2. முதல்வர்,
   அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
   அறந்தாங்கி

   } தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

துணை இயக்குநர்

சுருக்கம்

பொதுப் பணிகள் – உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் பணிமனை போதகராகப் பணிபுரிந்து மறைந்த திரு.பெ.அருணாசலம், என்பவரின் வாரிசுதாரர் திரு. அ. பிரகாஷ்ராஜ் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (3 ப) எண்.6

நாள்: 23.2.2021
சார்வரி வருடம், மாசி – 11
திருவள்ளுவர் ஆண்டு 2051
படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.21949/டி3/2020, நாள் 14.10.2020.

------

ஆணை:–

மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி துறையைச் சார்ந்த அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் பணிமனை போதகராகப் பணியாற்றிய திரு.பெ.அருணாசலம், என்பவர் பணியிலிருக்கும் போது 15.11.2011 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மனைவி திருமதி அ. தங்கம்மாள், என்பவரின் மகன் திரு அ. பிரகாஷ்ராஜ், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 12.12.2012 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. இவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் மார்ச் 2008-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 23.04.1993 ஆகும். திரு அ. பிரகாஷ்ராஜ், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.38566/டி3/2013, நாள்.22.08.2019–ன்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. திரு அ. பிரகாஷ்ராஜ், தூத்துக்குடி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 28.08.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம்

..2..